Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 74 உள்ளூர் - 15.03.2026 ஞாயிறு விலை ரூ.3/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 74 வெளியூர் - 16.03.2026 திங்கள் Price Rs. 3/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

மனம் விரும்பும் நபருக்கு என்ன பரிசு அளிக்கலாம்?

சென்ட்ரல் பாங்க்(சிபிஐ) 275 காலியிடங்கள்!

மின்வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு!

டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் விஜய் ஆஜர்!

# தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிப்பு!

புதுடெல்லி, மார்ச். 15–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தேதி இன்று மாலை அறிவிக்கப்படும் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்புடன் கேரளம், மேற்கு வங்கம், அசாம் மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச பேரவைத் தேர்தல் தேதியும் அறிவிக்கப்பட உள்ளது.





தமிழ்நாடு, மேற்கு வங்கம், அசாம், புதுச்சேரி, கேரளம் ஆகிய 5 மாநிலங்களுக்கு தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையிலான தேர்தல் ஆணையர்கள் சென்று தேர்தல் பணிகள் தொடர்பாக ஆலோசனை நடத்தி முடித்துள்ளனர். இந்தச் சூழலில் இன்று மாலை தேர்தல் தேதி அறிவிக்கப்பட உள்ளது.

வாக்காளர் சிறப்பு சீர்திருத்த பணிக்கு பிறகு, இந்த மாநிலங்களில் தேர்தல் நடைபெற உள்ளது கவனிக்கத்தக்கது. தலைநகர் டெல்லியில் இன்று மாலை நடைபெறும் செய்தியாளர் சந்திப்பு கூட்டத்தில் தேர்தல் தேதியை தலைமைத் தேர்தல் ஆணைய அதிகாரிகள் அறிவிக்கி ன்றனர். இதில் தமிழகம், கேரளம், புதுச்சேரியில் ஒரே நாளில் தேர்தல் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட வாய்ப்பு நிலவுகிறது.

இந்த அறிவிப்பு வெளியான பின்னர் தேர்தல் நடைபெற உள்ள தமிழகம், கேரளம், மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வரும். அதை பிரதிபலிக்கும் வகையில் புதுச்சேரியின் எல்லையோர பகுதிகள் மற்றும் சில முக்கிய சந்திப்புகளில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**தயார் நிலையில் அரசியல் கட்சிகள்:**

தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள சில கட்சிகளுக்கு ஏற்கெனவே தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அந்த கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளுடன் தொகுதி ஒதுக்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அதேநேரத்தில் தேர்தல் அறிக்கை தயாரிப்பு பணியையும் திமுக ஏற்கெனவே தொடங்கிவிட்டது குறிப்பிடத்தக்கது. தேர்தலை முன்னிட்டு திமுக பொதுக்கூட்டமும் நடைபெற்று வருவது கவனிக்கத்தக்கது.

அதிமுக, பாஜக இடம்பெற்றுள்ள கூட்டணியும் தேர்தலுக்கு தயாராகும் வகையில் பொதுக்கூட்டம் நடத்தி வருகிறது. பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் திருச்சியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஏற்கெனவே தொகுதி வாரியாக பேருந்தில் பிரச்சா ரம் மேற்கொண்டிருந்தார். அதோடு தேர்தல் வாக்குறுதிகள் சிலவற்றையும் அவர் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. இரண்டு கூட்டணியும் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களிடம் விருப்ப மனு பெற்றுள்ளது. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும் தேர்தல் பணிகளை தொடங்கி உள்ளது. சீமானின் நாதகவும் தயாராக களத்தில் உள்ளது.

# 66 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு: ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும் புதிய மாற்றங்கள்!

சென்னை, மார்ச். 15–

தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் பயணம் செய்வோருக்கு ஏப்ரல் மாதம் முதல் கூடுதல் செலவு காத்திருக்கிறது. மாநிலத்தில் உள்ள மொத்தம் 77 சுங்கச்சாவடிகளில் 66 சாவடிகளில், வரும் ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் கட்டணங்களை மாற்றியமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முடிவு செய்துள்ளது. இந்த வருடாந்திர கட்டண உயர்வு 5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மொத்த விற்பனை விலை குறியீட்டெண் அடிப்படையில் இந்த விலை மாற்றம் செய்யப்படுகிறது. மீதமுள்ள சுங்கச்சாவடிகளுக்கான கட்டண உயர்வு வரும் செப்டம்பர் மாதம் அமல்படுத்தப்படும். மேலும், கார் மற்றும் ஜீப் போன்ற தனியார் வாகனங்கள் அடிக்கடி பயன்படுத்துவதற்காக கடந்த ஆண்டு அறிமுகப்ப டுத்தப்பட்ட வருடாந்திர ஃபாஸ்டேக் பாஸ் கட்டணமும் 3,000 ரூபாயிலிருந்து 3,075 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.




இந்த கட்டண உயர்வு குறித்து பல்வேறு தரப்பினர் தங்களின் கவலைகளைப் பகிர்ந்து வருகின்றனர். வாடகை கார் உரிமையாளர்கள் தரப்பில் பேசுகையில், ஏற்கனவே டீசல் விலை உயர்வு மற்றும் ஓட்டுநர் ஊதியம் போன்றவற்றால் பயணக் கட்டணம் பெருமளவு உயர்ந்துள்ள நிலையில், இந்த சுங்கக்கட்டண உயர்வு பெரும் சுமையாக மாறும் என்று அஞ்சுகின்றனர். இதனால் மக்கள் வாடகை கார்களில் பயணம் செய்வதைத் தவிர்த்துவிட்டு, வந்தே பாரத் போன்ற ரயில் சேவைகளை நோக்கி நகரக்கூடும் என்றும், வாடகை வாகனங்களுக்குச் சிறப்புச் சலுகை அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுகர்வோர் நல ஆர்வலர்கள் தரப்பில் பார்க்கும்போது, இந்த உயர்வு நேரடியாக அத்தியாவசியப் பொருட்களின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டுகின்றனர். லாரிகள் மற்றும் சரக்கு வாகனங்களுக்கான கட்டணம் உயரும்போது, அந்தச் சுமை நுகர்வோர் மீதே சுமத்தப்படும். அதேபோல், ஆம்னி பேருந்துகளின் டிக்கெட் விலையும் உயர வாய்ப்புள்ளது.

மறுபுறம், சாலைக் கட்டுமான செலவுகள் முடிவடைந்த பிறகும் சுங்கச்சாவடிகள் அகற்றப்படாமல் இருப்பதோடு, பராமரிப்புச் செலவு என்ற பெயரில் நிரந்தரமாகக் கட்டணம் வசூலிக்கும் மத்திய அரசின் முடிவுக்கு லாரி உரிமையாளர்கள் சம்மேளனம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த ஒட்டுமொத்த கட்டண உயர்வு கட்டுமானம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் பெரும் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்நாட்டில் 6 ரயில் வழித்தடங்களில் கூடுதல் பாதைகள்: இறுதி ஆய்வுக்கு அனுமதி!

சென்னை, மார்ச். 15–

தமிழ்நாட்டில் 6 ரயில் வழித்தடங்களில் கூடுதல் ரயில் பாதைகள் அமைப்பதற்கான இறுதிக்கட்ட ஆய்வு நடத்த ரயில்வே வாரியம் அனுமதியளித்துள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை – அரக்கோணம், அரக்கோணம் – ரேணிகுண்டா, சென்னை – கூடூர் ஆகிய ரயில் வழித்தடஙளில் 5, 6–ஆவது பாதைகள், விழுப்புரம் – திருச்சி – திருநெல்வேலி – நாகர்கோயில் வழித்தடத்தில் 3, 4 –ஆவது பாதைகள், திருச்சி – காரைக்குடி – மானாமதுரை – மதுரை வழித்தடத்தில் 2–ஆவது பாதை, போத்தனூர் – பொள்ளாச்சி – பாலக்காடு வழித்தடத்தில் 2–ஆவது பாதை அமைக்கவும் இறுதிக்கட்ட ஆய்வு நடத்துவதற்கான அனுமதியை ரயில்வே வாரியம் அளித்துள்ளது.



மேலும், திருச்சியில் ஜி கார்னர் பகுதியில் உயர்மட்ட சுழற்பாலம் அமைப்பதற்கான தடையில்லாச் சான்றிதழையும் ரயில்வே வாரியமமைத்துள்ளது. இதனால், திருச்சி மக்களின் 16 ஆண்டுகால கோரிக்கை நிறைவேறியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்தப் பாலத்துக்காக ஒன்றரை ஆண்டுகளாக பணிகள் மேற்கொண்டதாகக் கூறிய மதிமுக எம்.பி. துரை வைகோ, மத்திய அரசுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்.

# ஈரான் போரில்
# பாகிஸ்தானுக்கு மறைமுக பங்கு வெளிச்சத்திற்கு வந்த
## இரட்டை வேடம்!!

ஈரான், மார்ச். 15–

ஈரான் போர், உலகம் முழுவதுமே பரபரப்பாக பேசப்படக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிறது. திடீரென பிப்ரவரி 28ஆம் தேதி அன்று அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதலை தொடங்கின. இந்த தாக்குதலில் ஈரான் தலைவர் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். அமெரிக்காவும் இஸ்ரேலும் முன்பை விட தீவிரமாகவும் உறுதியாகவும் இந்த முறை ஈரான் மீது தாக்குதல் நடத்தி கமேனியை படுகொலை செய்தன. பல முறை கமேனியை கொலை செய்ய முயற்சி செய்தும் அது பலன் தராமல் இந்த முறை மட்டும் எப்படி வெற்றி கிடைத்தது என்ற அனுமானங்கள் வழியாக தொடங்கி இருக்கி ன்றன. அதாவது ஈரான் போரில் அமெரிக்காவிற்கு பாகிஸ்தான் மறைமுகமாக உதவி செய்து வருவதாக சொல்லப்படுகிறது. அதற்கான ஆதாரங்களையும் ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர்.







ஈரானின் அண்டை நாடு பாகிஸ்தான். இரு நாடுகளும் 900 கிலோ மீட்டர் எல்லையை பகிர்கின்றன. அந்த வகையில் ஈரான் நாட்டு ராணுவத்தின் ஒவ்வொரு நகர்வையும் ஈரான் நாட்டிற்குள் என்ன மாதிரியான ஏவுகணைகள் ஆயுதங்கள் வருகை தருகின்றன என்பன உள்ளிட்ட முக்கியமான ரகசிய தகவல்களையும் கண்காணிக்க கூடிய வாய்ப்பு பாகிஸ்தானுக்கு இருக்கிறது. எனவே பாகிஸ்தானின் உதவியோடு தான் அமெரிக்கா இந்த முறை களமிறங்கியதாக சொல்லப்படுகிறது. பாகிஸ்தான் இந்த போரில் இரட்டை முகமாக இருப்பது வெளிவந்திருக்கிறது. ஒருபுறம் ஈரான் எங்களுடைய அண்டை நாடு, எங்களுடைய நட்பு நாடு எனக் கூறும் பாகிஸ்தான் அதே வேளையில் இந்த போரில் அமெரிக்காவுக்கு மறைமுக உதவி செய்திருக்கிறதாம். பாகிஸ்தான் அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியாவில் இருந்து இரண்டு விதங்களில் பெரிய உதவிகளை பெறுகிறது. ஈரானி எதிரியான சவுதி அரேபியா பாகிஸ்தானுக்கு தேவையான எண்ணெய், நிதி உதவி ஆகியவற்றை வழங்கி வருகிறது.

அதே போல ஈரானின் மற்றொரு எதிரி நாடான அமெரிக்கா பாகிஸ்தானுக்கு நிதி ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பல உதவிகளை வழங்கி வருகிறது. அந்த வகையில் பார்க்கும்போது ஒருபுறம் பாகிஸ்தான் அமெரிக்காவிற்கு கட்டுப்பட்ட நாடாக இருக்கிறது ஆனால் அதனை வெளிப்படையாக அறிவித்தால் ஈரானின் தாக்குதலுக்கு ஆளாக நேரம். அந்த வகையில் ஈரான் நட்பு நாடு என்ற அணுகுமுறையும் பின்பற்றிய வண்ணம் இருக்கிறது.

பாகிஸ்தான் மீது ஏன் திடீரென கவனம் திரும்புகிறது என்றால் அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த ஒன்றரை ஆண்டு காலமாகவே பாகிஸ்தானோடு மிக நெருக்கம் காட்டி வருகிறார்.

இந்தியாவை கூட பகைத்துக் கொண்டார் ஆனால் பாகிஸ்தானுடன் நட்பு பாராட்டினார். குறிப்பாக பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீர் அமெரிக்க அதிபர் டிரம்பை நேரடியாக சந்தித்து பேசினார். அப்போது டிரம்ப் பாகிஸ்தானுக்கு ஈரான் குறித்து மிக நன்றாக தெரியும் என கூறியிருந்தார். இந்த ஸ்டேட்மெண்ட் தான் தற்போது பாகிஸ்தான் மீது அனைவரின் கவனமும் திரும்புவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. பாகிஸ்தான் ஈரானுடன் 900 கிலோ மீட்டர் எல்லையை பகிர்கிறது ஈரானை எளிதாக உளவு பார்க்க பாகிஸ்தானால் முடியும். மேலும் ஈரானின் உளவு தகவல்களை பெறக்கூடிய நெட்வொர்க் பாகிஸ்தானிடம் இருக்கிறது. எனவே இவை எல்லாம் அமெரிக்க உளவுத்துறைக்கு மிக முக்கியமானதாக மாறியது. பாகிஸ்தான் நாட்டு எல்லையை அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டது என சொல்லப்படுகிறது. அதாவது உளவு விமானங்களை பாகிஸ்தான் எல்லையில் பறக்க செய்து ஈரானை உளவு பார்த்ததாக சொல்லப்படுகிறது. இந்த தகவல்கள் துல்லிய தாக்குதல் நடத்த உதவியதாம்.

# மின் வாரிய ஊழியர்களுக்கு 6% ஊதிய உயர்வு: தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச். 15–

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு 6 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்படுவதாகத் தமிழக அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இது தவிர, பணி மூப்பு அடிப்படையில் கூடுதல் சலுகைகளையும் அரசு அறிவித்திருப்பது ஊழியர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வழிகாட்டுதலின்படியும், மின்சாரத் துறை அமைச்சர் சி.சி. சிவசங்கர் முன்னிலையிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஊதிய உயர்வு கடந்த 2023–ம் ஆண்டு டிசம்பர் 1–ம் தேதி முதல் கணக்கிடப்பட்டு நடைமுறைக்கு வரும். குறிப்பாக, 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாகப் பணியாற்றிய ஊழியர்களுக்குச் சிறப்புச் சலுகையாக 3 சதவீத சேவை ஊதிய உயர்வு கூடுதலாக வழங்கப்பட உள்ளது. ஊதிய மாற்றத்தின் பலன்கள் பொருளாதார ரீதியாக வரும் 2025–ம் ஆண்டு டிசம்பர் 1–ம் தேதி முதல் ஊழியர்களுக்குக் கிடைக்கத் தொடங்கும். இருப்பினும், இடைப்பட்ட காலமான டிசம்பர் 1, 2023 முதல் நவம்பர் 30, 2025 வரையிலான 24 மாதங்களுக்கு, ஊழியர்களுக்கு மாதம் 500 ரூபாய் வீதம் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும், 2025 டிசம்பர் முதல் 2026 பிப்ரவரி வரையிலான காலத்திற்கு ஒருமுறை மட்டும் வழங்கப்படும் சிறப்புத் தொகையும் இதில் அடங்கும். இந்த ஊதிய மாற்றங்களுடன் சேர்த்து, ஊழியர்களின் பதவிகளுக்கு ஏற்ப 3,000 ரூபாய் முதல் 7,000 ரூபாய் வரை சிறப்புப் படிகளும் வழங்கப்படும்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. அரசின் இந்த அறிவிப்பு மின்சார வாரிய ஊழியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

தலையங்கம்

மதுரை மணி

வியாழக்கிழமை 14.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 01-ம் தேதி

# எந்த எரிபொருளையும் சேமிக்க வேண்டாம்..!




ஈரான் இஸ்ரேல் போர் உலகம் முழுவதும் எரிபொருள் விநியோகத்தில் கடும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.. அந்த வகையில் இந்தியாவில் கேஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.. சிலிண்டரை தொடர்ந்து தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படும் என்று சமூக வலைதளங்கள் வதந்தி பரவ தொடங்கியது.. இதனால் நாட்டின் பல்வேறு நகரங்களில் பீதியடைந்த பொதுமக்கள் பெட்ரோல், டீசலை அதிகமாக சேமிக்க தொடங்கி உள்ளனர்..

இந்த நிலையில் நாடு முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசலை சேமித்து வைப்பது குறித்து இந்தியா முழுவதும் உள்ள குடிமக்களுக்கு அதிகாரிகள் ஒரு முக்கியமான ஆலோசனையை வழங்கி உள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள ஒரு பெட்ரோல் பம்பில் நடந்த ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, அங்கு பெட்ரோல் தளர்வான கொள்கலனில் நிரப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது, இது கடுமையான பாதுகாப்பு கவலைகளை எழுப்புகிறது.

நாடு முழுவதும் எரிபொருள் விநியோகம் போதுமானதாக இருப்பதாக அதிகாரிகள் பொதுமக்களுக்கு உறுதியளித்துள்ளனர், மேலும் எரிபொருள் வாங்கும் போது அல்லது சேமிக்கும் போது பாதுகாப்பற்ற நடைமுறைகளில் ஈடுபட வேண்டாம் என்று மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

நாடு முழுவதும் போதுமான பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகம் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் இதுகுறித்த ஆலோசனையை வெளியிட்டுள்ளது.. அதன்படி, நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிலையங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் உடனடியாகக் கிடைக்கிறது. எரிபொருள் பற்றாக்குறை இல்லை என்றும், குடிமக்கள் பீதி அடையவோ அல்லது தேவையில்லாமல் எரிபொருளை சேமிக்கவோ தேவையில்லை.

பெட்ரோல் பம்புகள் சாதாரணமாக இயங்குகின்றன என்றும், நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்ய நன்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் வலியுறுத்தினர். பீதியில் வாங்குதல் அல்லது பாதுகாப்பற்ற சேமிப்பு நடைமுறைகளைத் தவிர்க்கவும் அரசாங்கம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தது.

தமிழ்நாட்டில் உள்ள ஒரு சில்லறை எரிபொருள் விற்பனை நிலையத்தில் பாதுகாப்பு மீறலை அதிகாரிகள் கவனித்ததை அடுத்து இந்த ஆலோசனை வெளியிடப்பட்டது. பெட்ரோல் பம்பில் உள்ள தளர்வான கொள்கலனில் பெட்ரோல் விநியோகிக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பெட்ரோல் மிகவும் எரியக்கூடியது என்பதால் இந்த முறையில் எரிபொருளைக் கையாள்வது மிகவும் ஆபத்தானதாகக் கருதப்படுகிறது.

பொருத்தம் இல்லாத கொள்கலன்களில் எரிபொருளை சேமித்து வைப்பது அல்லது எடுத்துச் செல்வது தீ விபத்துகள், கசிவு அல்லது சுற்றுச்சூழல் அபாயங்களுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது. சம்பவத்தைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பெட்ரோல் பம்பை நிறுத்தி, பொருத்தமான ஒழுங்கு நடவடிக்கைகளைத் தொடங்குவதன் மூலம் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்தனர்.

பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகிக்கும்போது பாதுகாப்பு விதிகளை கண்டிப்பாகப் பின்பற்றுமாறு அனைத்து எரிபொருள் நிலைய நிர்வாகிகள் மற்றும் டீலர்களுக்கு அதிகாரிகள் நினைவூட்டியுள்ளனர். நாடு முழுவதும் உள்ள பெட்ரோல் பம்புகள், அங்கீகரிக்கப்பட்ட கொள்கலன்களில் மற்றும் சரியான பாதுகாப்பு நிலைமைகளின் கீழ் மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இந்த விதிகளை மீறுவது சம்பந்தப்பட்ட டீலர் அல்லது விற்பனை நிலையத்திற்கு எதிராக கடுமையான நடவடிக்கைக்கு வழிவகுக்கும். வாடிக்கையாளர்களுக்கு மட்டுமல்ல, தொழிலாளர்கள் மற்றும் அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியம் என்று அதிகாரிகள் வலியுறுத்தினர். எரிபொருள் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு குடிமக்கள் வலியுறுத்தல் எரிபொருள் வாங்கும் போது அடிப்படை பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் ஒத்துழைக்குமாறு அரசாங்கம் குடிமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

தளர்வான கொள்கலன்கள், பாட்டில்கள் அல்லது பிற பாதுகாப்பற்ற சேமிப்புப் பொருட்களில் பெட்ரோல் அல்லது டீசலை சேகரிக்க வேண்டாம் என்று மக்களுக்கு குறிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நடைமுறைகள் தீ ஆபத்துகள் மற்றும் விபத்துகள் உள்ளிட்ட ஆபத்தான சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கும். அதற்கு பதிலாக, நுகர்வோர் எப்போதும் சரியான எரிபொருள் தொட்டிகள் அல்லது எரியக்கூடிய திரவங்களை சேமிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட சான்றளிக்கப்பட்ட கொள்கலன்களைப் பயன்படுத்த வேண்டும். விபத்துகளைத் தடுக்கவும், நாடு முழுவதும் பாதுகாப்பான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யவும் பொது விழிப்புணர்வு மற்றும் பொறுப்பான நடத்தை முக்கியம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீறல்களுக்கு கடுமையான நடவடிக்கை

பாதுகாப்பு வழிகாட்டுதல்களை மீறும் எந்தவொரு பெட்ரோல் பம்ப் அல்லது டீலரும் கடுமையான தண்டனைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். விதிகளை பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக வழக்கமான கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். பெட்ரோல் மற்றும் டீசலைக் கையாளும் போது பாதுகாப்பு ஒரு முதன்மையான முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்பதை எரிபொருள் டீலர்கள் மற்றும் நுகர்வோர் இருவருக்கும் நினைவூட்டுவதே இந்த ஆலோசனையின் நோக்கமாகும். வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம், விபத்துகளைத் தடுக்கவும், இந்தியா முழுவதும் உள்ள எரிபொருள் நிலையங்களில் பாதுகாப்பான செயல்பாடுகளைப் பராமரிக்கவும் அதிகாரிகள் நம்புகின்றனர்.

# திருப்பதியில் பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பு- 3 கிலோ மீட்டர் தூரம் வரிசையில் காத்திருந்து தரிசனம்!

திருப்பதி, மார்ச். 15–

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று காலை 9 மணி முதல் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் கூட்டம் படிப்படியாக அதிகரித்து காணப்பட்டது. வார இறுதி விடுமுறை மற்றும் தொடர் விடுமுறை காரணமாக நாடு முழுவதிலும் இருந்து பக்தர்கள் அதிக அளவில் தரிசனத்திற்கு வர தொடங்கினர்.



திரளான பக்தர்கள் தரிசனத்திற்கு தங்கள் வாகனங்கள் மூலம் வந்ததால் அலிபிரி சோதனை சாவடியில் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கியது. பஸ்கள் செல்லும் வரிசையில் சிலர் தங்களது வாகனங்களை புகுத்தினர். இதனால் பஸ்கள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இதனால் பஸ்சில் இருந்த பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். போலீசார் மற்றும் தேவஸ்தான அதிகாரிகள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

பக்தர்கள் கூட்டம் அதிகரித்ததால் கோவிலில் இருந்து 3 கிலோமீட்டர் தூரம் உள்ள ஷீலா தோரணம் வரை பக்தர்கள் தரிசனத்திற்காக வரிசையில் காத்திருந்தனர். திருப்பதியில் கடும் வெயில் கொளுத்துவதால் முதியவர்கள் குழந்தைகள் பாதிக்கப்பட்டனர்.

# ஆபரேஷன் லோட்டஸ்.. எம்.எல்.ஏ.க்களை பெங்களூரு ரிசார்ட்டில் பதுக்கிய ஒடிசா காங்கிரஸ்!

புதுடெல்லி, மார்ச். 15–

தமிழ்நாடு, மகாராஷ்டிரா, பீகார், ஒடிசா உள்ளிட்ட 10 மாநிலங்களில் மொத்தம் 37 மாநிலங்களவை தொகுதிகளுக்கு மார்ச். 16–ல் தேர்தல் நடைபெற உள்ளது.



இந்நிலையில் ஆதரவை தக்க வைக்க ஒடிசா காங்கிரஸ், ரிசார்ட் அரசியலில் இறங்கியுள்ளது. சுமார் 10 முதல் 12 காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் புவனேஸ்வரிலிருந்து பெங்களூருக்கு அழைத்து வரப்பட்டு தனியார் ரிசார்ட் ஒன்றில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

‘ஆபரேஷன் லோட்டஸ்’ மூலம் பாஜக பெரிய அளவிலான சலுகைகளை வழங்கி தங்கள் எம்.எல்.ஏக்களை கட்சி மாறி வாக்களிக்க அழுத்தம் கொடுப்பதாக காங்கிரசை சேர்ந்த கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் குற்றம்சாட்டியுள்ளார்.

ஒடிசாவில் மொத்தம் 4 மாநிலங்களவை இடங்களுக்குத் தேர்தல் நடைபெறுகிறது. பாஜக 2 இடங்களில் உறுதியாக வெற்றி பெறும் நிலையில் உள்ளது. முன்னாள் ஆளும் கட்சியான நவீன் பட்நாயக்கின் பிஜேடி மற்றும் காங்கிரஸ் இணைந்து ஒரே வேட்பாளரை களமிறங்கியுள்ளது.

மார்ச் 16 வரை பெங்களூருவில் தங்கியிருக்கும் இந்த எம்எல்ஏக்கள், பின்னர் நேரடியாகப் புவனேஸ்வர் சென்று வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜரான விஜயிடம் அதிகாரிகள் அடுக்கடுக்கான கேள்வி!

புதுடெல்லி, மார்ச். 15–

3–வது முறையாக டெல்லியில் சி.பி.ஐ. அலுவலகத்தில் மார்ச் 10–ந்தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு விஜய்க்கு மீண்டும் சம்மன் அனுப்பப்பட்டது. ஆனால் விஜய் தரப்பில், டெல்லிக்கு வருவதில் இருந்து விலக்கு அளிக்குமாறு கேட்கப்பட்டது.



தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் நெருங்கி வருவதால் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு இருப்பதாகவும், டெல்லிக்கு பதிலாக தமிழகத்தில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் விசாரணை நடத்துமாறும் விஜய் தரப்பில் கோரப்பட்டது.

ஆனால், அதை ஏற்க மறுத்த சி.பி.ஐ. அதிகாரிகள் மார்ச் 15–ந்தேதி (இன்று) விஜய் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டனர்.

இதையடுத்து, சி.பி.ஐ. விசாரணைக்கு ஆஜராவதற்காக விஜய் நேற்று டெல்லி புறப்பட்டு சென்றார். சென்னை நீலாங்கரையில் உள்ள வீட்டில் இருந்து நேற்று பிற்பகலில் காரில் புறப்பட்ட விஜய் சென்னை விமான நிலையத்துக்கு சென்றார். பின்னர் அங்கிருந்து விஜய் நேற்று மாலை தனி விமானத்தில் டெல்லிக்கு புறப்பட்டு சென்றார்.

விஜய்யுடன் கட்சி நிர்வாகிகள் ஆதவ் அர்ஜூனா, நிர்மல்குமார் உள்ளிட்ட 7 பேர் உடன் சென்றனர். நேற்று இரவு டெல்லி சென்ற விஜய், இரவில் அங்குள்ள தாஜ் மான்சிங் ஓட்டலில் தங்கினார்.

இன்று காலையில் விஜய் ஓட்டலில் இருந்து காரில் புறப்பட்டு சி.பி.ஐ. தலைமை அலுவலகத்துக்கு சென்றார். அங்கு விஜய், சி.பி.ஐ. அதிகாரிகள் முன்பு விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை கேட்டனர்.

கூட்ட நெரிசல் ஏற்பட்ட பிறகும் பொதுமக்கள் மத்தியில் தொடர்ந்து பேசியது ஏன்? பாதுகாப்பு ஏற்பாடுகளில் எங்கே குளறுபடி ஏற்பட்டது என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை அவர்கள் கேட்டதாக கூறப்படுகிறது.

நெரிசல் சம்பவம் நடந்த போது என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டது என்பது குறித்த விவரங்களையும் கேட்டதாக தெரிகிறது. மேலும் விசாரணையின் போது ஏற்கனவே கேட்கப்பட்ட கூடுதல் ஆவணங்களையும் விஜய் தாக்கல் செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் களம் சூடுபிடித்து உள்ள நிலையில், விஜய்யிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் நடத்தும் இந்த தொடர் விசாரணை அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த விசாரணை இன்று மாலை வரை நீடிக்கலாம் என்றும், தேவைப்பட்டால் நாளையும் தொடர வாய்ப்பு உள்ளதாகவும் சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விசாரணையின் முடிவை பொறுத்து விஜய் எப்போது சென்னை திரும்புவார் என்பது தெரியவரும்.

# PNG வைத்திருப்பவர்களுக்கு அதிரடி தடை உத்தரவு பிறப்பித்த மத்திய அரசு!

புதுடெல்லி, மார்ச். 15–

PNG இணைப்பு வைத்திருப்பவர்களுக்கு இனிமேல் சமையல் கியாஸ் சிலிண்டர் நிரப்பி வழங்கப்படாது. அவர்கள் LPG–க்காக இனிமேல் புக் செய்ய முடியாது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.



அத்துடன் LPG இணைப்பை சரண்டர் செய்ய வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது. இதனால் சமையல் எரிவாயு சிலிண்டருக்கான (LPG) தேவை சற்று குறையும் என மத்திய அரசு நினைக்கிறது.

இந்தியா எல்.பி.ஜி. தேவைகளில் 60 சதவீதத்தை இறக்குமதி செய்கிறது. அதுவும் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற வளைகுடா நாடுகளில் இருந்த 85 முதல் 90 சதவீதம் வரை இறக்குமதி செய்கிறது. ஹார்முஸ் ஜலசந்தி மூலமாகத்தான் இந்தியா வந்தடைகிறது. தற்போது ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் செல்ல ஈரான் அனுமதி மறுத்துள்ளதால் சிக்கல் ஏற்பட்டுள்ளது.



# உங்கள் மனம் விரும்பும் நபருக்கு என்ன பரிசு அளிக்கலாம்?



உங்கள் மனம் விரும்பும் நபருக்கு பரிசுகளை அளிக்கும் முன் ஒன்றுக்கு நூறு முறை சிந்திப்பது அவசியம். காரணம், நீங்கள் அளிக்கும் பரிசு அவர் மனம் விரும்பும் வகையில் இருக்க வேண்டும். அவர் விருப்பத்திற்கு பொருத்தம் இல்லா பரிசு பொருட்களை வழங்குவது சில சமயங்களில், உறவில் விரிசலை கொண்டு வரலாம். எனவே, பரிசுகளை தேர்வு செய்கையில் கூடுதல் கவனத்துடன் இருப்பது அவசியம். உங்கள் மனம் விரும்பும் நபரை ஈர்க்க உதவும் பரிசை தேர்வு செய்ய, ஜோதிட கணிப்புகள் உதவி செய்யும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

| | |
|---|---|
| மேஷம் | Fitness Tracker |
| ரிஷபம் | Perfume |
| மிதுனம் | eReader |
| கடகம் | வீட்டு அலங்கார பொருட்கள் |
| சிம்மம் | ஆடை, நகை |
| கன்னி | குறிப்பேடு |
| துலாம் | கவர்ச்சிகரமான பொருட்கள் |
| விருச்சிகம் | சன்கிளாஸ் |
| தனுசு | பயணத்திற்கு உதவும் பொருட்கள் |
| மகரம் | Wallet |
| கும்பம் | கேஜெட்கள் |
| மீனம் | இசைக்கருவிகள் |

**மேஷம்** – மேஷ ராசியில் பிறந்தவர்கள் அடிப்படையில் உடற்பயிற்சி ஆர்வலர்கள், தங்கள் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தக்கூடியவர்கள். அவர்களின் குணத்திற்கு ஏற்ற வகையில் நீங்கள் Fitness Tracker, Smartwatch போன்றவற்றை பரிசாக அளிக்கலாம்.

**ரிஷபம்** – ரிஷப ராசியில் பிறந்தவர்களை ஆளும் கிரகமாக சுக்கிரன் இருக்கிறார். அழகு, ஆடம்பரம், தோரணையை பிரதிபலிக்கும் சுக்கிரனை அதிபதியாக கொண்ட ரிஷப ராசியினருக்கு வாசனை திரவியங்கள், அழகு சாதனப் பொருட்களை பரிசாக அளிக்கலாம்.

**மிதுனம்** – புதன் கிரகத்தை அதிபதியாக கொண்ட மிதுன ராசியினர் கற்றல் ஆர்வம் மிக்கவர்கள். ஆழ்ந்த சிந்தனையாளர்கள், படைப்பாற்றல் மிக்கவர்கள். அவர்களின் குணத்திற்கு ஏற்ற பரிசு பொருளாக eReader, Tablets மற்றும் பிற கற்றல் சார்ந்த பொருட்கள் பார்க்கப்படுகிறது.

**கடகம்** – கருணை உள்ளம் கொண்ட கடக ராசியினர், கலை சார்ந்த விஷயங்களில் ஆர்வம் கொண்டவர்கள். கலை சார்ந்த பொருட்கள், குறிப்பாக வீட்டு அலங்கார பொருட்களை இந்த கடக ராசியினருக்கு நீங்கள் பரிசாக அளிக்கலாம்.

**சிம்மம்** – சூரியனை அதிபதியாக கொண்ட சிம்ம ராசியினர் ஆளுமை பண்பு கொண்டவர்கள். அவர்களின் ஆளுமையை போற்றும் பரிசு பொருட்கள் அவர்களுக்கு தோதாக இருக்கும். அந்த வகையில் நீங்கள் நகைகள், தோரணையான ஆடைகள், Sun–glass போன்றவற்றை அளிக்கலாம்.

**கன்னி** – ஆழ்ந்த சிந்தனையாளர்கள் என குறிப்பிடப்படும் கன்னி ராசியினருக்கு, குறிப்புகள் எடுக்க உதவும் குறிப்பேடு, பேனா போன்றவற்றை நீங்கள் பரிசாக அளிக்கலாம்.

**துலாம்** – துணிச்சலான முடிவுகளை எடுக்கும் குணம் கொண்ட துலாம் ராசியினருக்கு, கண்களுக்கு விருந்து அளிக்கும் பொருட்கள் விருப்பமான ஒன்று ஆகும். அவர்களின் மனதை வெல்லும் வகையில் நீங்கள் கண்கவர் பை, சுவர் ஓவியம், வீட்டு அலங்கார பொருட்களை பரிசாக அளிக்கலாம்.

**விருச்சிகம்** – ஆற்றல் மிக்க செவ்வாய் கிரகத்தின் பண்புகளை கொண்டிருக்கும் விருச்சிக ராசியினருக்கு, கம்பீரத்தை வெளிப்படுத்தும் பரிசு பொருட்கள் சரியான ஒரு தேர்வாக இருக்கும். அந்த வகையில் நீங்கள் அவர்களுக்கு தோரணையான சன்கிளாஸ் வாங்கி பரிசாக அளிக்கலாம்.

**தனுசு** – சாகச விரும்பிகளான தனுசு ராசியினர், பயணங்களை விரும்புகிறவர்கள். அடிக்கடி பயணங்கள் பல செய்யும் இவர்களுக்கு, பயணத்துடன் தொடர்பு கொண்ட பொருட்களை வாங்கி நீங்கள் பரிசாக அளிக்கலாம். உதாரணமாக, ட்ராவல் பேக், ட்ரக்கிங் ஷூ போன்றவற்றை பரிசாக அளிக்கலாம்.

**மகரம்** – வலமான எதிர்காலத்திற்கு தேவையான சேமிப்பு திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களை கொண்டிருக்கும் மகர ராசியினருக்கு நீங்கள், அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பரிசு பொருட்களை வாங்கி தரலாம். குறைந்தது, அவர்களின் பணத்தை பத்திரப்படுத்தி வைக்க உதவும் Wallet வாங்கி பரிசாக அளிக்கலாம்.

**கும்பம்** – கும்ப ராசியில் பிறந்தவர்கள் அடிப்படையில் தொழில்நுட்ப பிரியர்கள். தொழில்நுட்பம் சார்ந்த விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்தும் இவர்களுக்கு, மொபைல், டேப், லேப்டாப் போன்ற மின் சாதனப் பொருட்களை பரிசாக அளிக்கலாம்.

**மீனம்** – இசை, இலக்கியம், ஓவியம் என கலை சார்ந்த விஷயங்களில் கவனம் செலுத்தும் மீன ராசியினருக்கு, இசையுடன் தொடர்புடைய பொருட்களை வாங்கி பரிசாக அளிக்கலாம். குறிப்பாக, இசைக்கருவிகளை அவர்களுக்கு பரிசாக அளிக்கலாம்

**பொறுப்புத் துறப்பு:**

பொதுவான ஜோதிட கணிப்புகள் மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகள் அடிப்படையில் இந்த தகவல்கள் தொகுக்கப்பட்டுளன. அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்ட கருத்துகள் அல்ல

# ஈரான் தாக்குதல் எதிரொலி; ஈராக்கில் இருந்து அமெரிக்கர்கள் வெளியேற உத்தரவு!

ஈரான், மார்ச். 15–

ஈரானின் தொடர் தாக்குதல் எதிரொலியாக, ஈராக்கில் உள்ள அமெரிக்கர்கள் உடனடியாக வெளியேற அமெரிக்க தூதரகம் அறிவுறுத்தி உள்ளது.

ஈரான் மீதான அமெரிக்க இஸ்ரேலிய படைகளின் தாக்குதல்15 நாட்களை கடந்தது. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போர் நிற்பதற்கான எந்த வழிகளும் தென்படவில்லை. ஈராக்கில் ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 6 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர்.



இந்நிலையில் ஈராக்கில் உள்ள அமெரிக்கர்கள் உடனடியாக வெளியேற அமெரிக்க தூதரகம் அறிவுறுத்தி உள்ளது. அமெரிக்க குடிமக்களை குறிவைத்து நடத்தப்பட்ட தொடர்ச்சியான தாக்குதல்களைத் தொடர்ந்து இந்த அறிவுறுத்தல்களை பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் வழங்கி இருக்கிறது.

இது குறித்து, அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஈராக் வான்வெளியில் ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் ராக்கெட்டுகள் தொடர்ந்து ஆபத்து ஏற்படும் அபாயத்தின் காரணமாக, பாக்தாத்தில் உள்ள தூதரகம் மற்றும் எர்பில் உள்ள துணைத் தூதரகத்திற்கு வர முயற்சிக்க வேண்டாம்.

ஈராக்கின் வான்வெளி மூடப்பட்டிருப்பதால், ஈராக்கை விட்டு வெளியேற முயற்சிக்கும் அமெரிக்கர்களுக்கு அமெரிக்க அரசாங்கம் உதவி வழங்கும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**ரூ.31 லட்சம் கோடி இழப்பு**

அமெரிக்கா–ஈரான் போர் காரணமாக இந்திய பங்குச் சந்தையில் ரூ.31 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 15 நாட்களில் மும்பை பங்குச்சந்தை சென்செக்ஸ் 4,750 புள்ளிகளுக்கு மேல் சரிந்துள்ளது.




## நீங்கள் தினமும் இந்தத் தவறை செய்றீங்களா..? 30 வயதிலேயே மாரடைப்பு? வார்னிங்..!



நமது உணவு முறையில் உப்பு ஒரு மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. உப்பு இல்லாமல் உணவுகள் சுவையற்றுப் போவதால், ஒவ்வொரு வீட்டிலும் உப்பு பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும், அதிகப்படியான உப்பை உட்கொள்வது உடல்நலத்திற்கு மிகவும் ஆபத்தானது என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். நாம் உட்கொள்ளும் உப்பின் அளவைக் கட்டுப்படுத்தாவிட்டால், அது நமது உடலில் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். இதனாலேயே, நமது அன்றாட உணவில் சேர்க்கப்படும் உப்பின் அளவை மிகக் கவனமாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

ஒவ்வொரு நபரும் ஒரு நாளைக்கு அதிகபட்சமாக ஐந்து கிராம் உப்பை மட்டுமே உட்கொள்ள வேண்டும். அதாவது, ஒரு நாள் முழுவதற்குமான உணவிற்கு ஒரு சிட்டிகை உப்பு மட்டுமே போதுமானது .இருப்பினும், பலருக்கும் சமையலின்போது மட்டுமல்லாமல், சாப்பிடும்போதும் தனியாக உப்பைச் சேர்த்துக்கொள்ளும் பழக்கம் உள்ளது. சிலர் உணவைச் சாப்பிடத் தொடங்குவதற்கு முன்பே அதில் உப்பைச் சேர்த்துக்கொள்கின்றனர். இத்தகைய பழக்கம் உடல்நலத்திற்கு மிகவும் கேடு விளைவிக்கக்கூடியது என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இதேபோல், அப்பளம், ஊறுகாய் மற்றும் உப்பு நிறைந்த சிற்றுண்டிகள் போன்ற உணவுகளை அடிக்கடி உட்கொள்வதும் உடல்நலத்திற்கு ஆபத்தானது. இத்தகைய உணவுகளில் உள்ள அதிகப்படியான உப்பின் அளவு நமது உடலில் பலவிதமான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். எனவே, இத்தகைய உணவுகளை முடிந்தவரை குறைத்துக்கொள்வதோ அல்லது முழுமையாகத் தவிர்ப்பதோ சிறந்தது என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்..

நமது உணவில் அதிகப்படியான உப்பைச் சேர்த்துக்கொண்டால், உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அதே வேளையில், இதய நோய்கள் ஏற்படும் அபாயமும் அதிகரிக்கிறது. மேலும், இது சிறுநீரகங்களையும் பாதிக்கும் வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந்தப் பிரச்சினைகள் ஒரே நாளில் தோன்றிவிடுவதில்லை; மாறாக, தினமும் அதிகப்படியான உப்பை உட்கொண்டு வருவது காலப்போக்கில் நமது உடலில் படிப்படியாகத் தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்று அவர்கள் எச்சரிக்கின்றனர்.

## சினிமா துளிகள்..!

### சீக்கிரமே சர்ப்ரைஸ் இருக்கு... 'அரசன்' அப்டேட் கொடுத்த வெற்றிமாறன்!



இயக்குநர் வெற்றி மாறன் மற்றும் நடிகர் சிலம்பரசன் கூட்டணியில் உருவாகும் திரைப்படம் 'அரசன்.' அனிருத் இசையமைக்கும் இந்த திரைப்படம் வெற்றி மாறன் இயக்கத்தில் தனுஷ் நடித்து வெளியான வடசென்னை படத்தின் கதைக்களத்தில் உருவாகிறது. இந்தப் படத்தின் அறிவிப்பு வெளியானதில் இருந்தே படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்து விட்டது.

படத்தின் முதல் அறிவிப்பு தொடங்கி, டைட்டில் மற்றும் இதர அப்டேட் வீடியோக்கள் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இந்தப் படத்தினை இந்த ஆண்டுக்கு இறுதிக்குள் ரிலீஸ் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. படத்தின் படப்பிடிப்பு தொடர்பான தகவல்களும் இணையத்தில் வெளியாகி வருகின்றது. இந்த நிலையில், இயக்குநர் வெற்றி மாறன் அரசன் படத்தின் அப்டேட் கொடுத்துள்ளார்.

இதுகுறித்து பேசிய வெற்றி மாறன், "இந்த முறை கதையை முழுமையாக எழுதி முடித்த பிறகே படப்பிடிப்புக்கு சென்றேன். எனது மற்றப் படங்களை விட இந்தப் படம் வேகமாக நிறைவடையும். சில நாட்களில் இந்தப் படத்தின் காட்சிகளில் சிலவற்றை எங்களால் வெளியிட முடியும். அதுவரை நாங்கள் இந்த விஷயத்தில் அமைதி காக்க விரும்புகிறோம்," என்றார்.

அரசன் திரைப்படத்தில் நடிகர் சிலம்பரசன் இரட்டை வேடங்களில் நடிப்பதாகவும், நடிகர் விஜய் சேதுபதியும் இந்தப் படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.



## கோவை செழியன் 26-வது ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு!

திருப்பூர், மார்ச். 14–

திருப்பூர் மாவட்டம், தாராபுரம்–காங்கேயம் அருகே குங்காருபாளையத்தில், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் நிறுவனர் கோவை செழியனின் 26–வது ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி அவரது நினைவிடத்தில் கொங்கு தமிழர் எழுச்சி பேரவை நிறுவனத் தலைவர் சங்கர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் மாநில துணைத் தலைவர் கே. ரங்கசாமி, திருப்பூர் மாவட்ட செயலாளர் துரை கதிரவேல், திருப்பூர் மாவட்ட தலைவர் சிவநாதன், சேலம் மாவட்ட செயலாளர் ஆர். செல்லப்பன், ஈரோடு மாவட்ட பொறுப்பாளர் பிரசாத், கோவை மாவட்ட தலைவர் ரவிக்குமார், செயலாளர் கொங்கு ரமேஷ், சேலம் மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் செல்விகுமார், மகளிர் அணி நிர்வாகி சந்தியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மதுரை மாவட்டம். மதுரை வடக்கு வட்டம் அன்னை சத்தியா அரசு குழந்தைகள் இல்லத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சார்பில் சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட கைப்பந்து விளையாட்டு மைதானம், வளாகத்தில் பேவர் பிளாக் மற்றும் மின்விளக்குகள் போன்ற முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார்.



பழனியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாவட்ட இளைஞரணி சார்பில் இப்தார் விருந்து நடைபெற்றது. இதற்கு மாவட்ட தலைவர் ஜே.பி.சரவணன் தலைமை வகித்தார். இதில் சரவண பொய்கை கந்த விலாஸ் என் பாஸ்கரன், கண்பத் கிரேண்ட் ஹோட்டல் அதிபர் என்.ஹரிஹரமுத்து, வள்ளுவர் தியேட்டர் அதிபர் செந்தில்குமார், இளைஞர் அணி நிவாஸ்தீன், தவ்பிக் அஹமது ஆகியோர் பங்கேற்றனர்.

## தேனி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜித்சிங் ஆய்வு!

தேனி, மார்ச் 15–

தேனி மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குசாவடி மையங்களில் அடிப்படை வசதி குறித்து மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜித்சிங் ஆய்வுகள் மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில் தேனி மாவட்டத்தில் உள்ள ஆண்டிபட்டி, பெரியகுளம், கம்பம், போடிநாயக்கனூர் ஆகிய 4 சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்கு சாவடி மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாவட்டத்தில் உள்ள போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொட்டக்குடி பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி, மற்றும் குரங்கணி, முந்தல் ஆகிய பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி, நடுநிலை பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு சாவடி மையங்களில் குடிநீர்வசதி, கழிப்பறை வசதி மற்றும் வாகனம் நிறுத்துமிடம் சாய்தளம் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆய்சியர் ரஞ்ஜித்சிங் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது போடிநாயக்கனூர் வட்டாச்சியர் சந்திரசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர் மலர்விழி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.





இராசிபுரம் சட்டமன்ற தொகுதி வெண்ணந்தூர் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.எம்.துரைசாமி அவர்கள் ஏற்பாட்டில் வெண்ணந்தூர் ஒன்றியம், அத்திப்பழகனூர் முன்னாள் அதிமுக கிளை பிரதிநிதி முனியன் அவர்கள் தலைமையில் 25 பேர் அதிமுகவிலிருந்து விலகி மாநிலங்களவை உறுப்பினர் கே ஆர் என் இராஜேஷ்குமார் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர். நிகழ்ச்சியில் ஒன்றிய துணை செயலாளர் திரு. தமிழமணி, சார்பு அணி அமைப்பாளர் திரு.விஜயபாஸ்கர், துணை அமைப்பாளர் திரு.பூபாலன்,கிளை கழக செயலாளர்கள் திரு.ரமேஷ், திரு.பூபதி, பிரதிநிதி திரு. நடேசன், திரு.பிரபு, திரு பழனிசாமி, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர் திரு.பெரியசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் வடக்கு தொகுதி வேட்பாளர் அறிவிப்பு!

திருப்பூர், மார்ச். 15–

அகில பாரத இந்து மகா சபா சார்பாக சென்னை பாரதி தெரு பெரம்பூரில் அளவில் ஹிந்து எழுச்சி பொதுக்கூட்டம் மற்றும் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் அகில பாரத இந்து மாத சபாவின் தேசியத் தலைவர் சுவாமி சக்கரபாணி மகாராஜ் அவர்களும் தலைமையில் அகில பாரத இந்து மகா சபாவின் தேசிய துணை தலைவரும் தமிழக தலைவருமான தா.பாலசுப்பிரமணியன் முன்னிலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்தில் 2026 தமிழகத்தில் நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் முதல் கட்ட110 வேட்பாளர் அறிமுகம் செய்யப்பட்டது அதில் திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதியின் அகில பாரத இந்து மகா சபாவின் மாநில இளைஞரணி தலைவர் திருப்பூர் மாவட்ட தலைவர் டாக்டர் ஜி.பாலகிருஷ்ணன் என்கின்ற வல்லபை பாலா அவர்களை வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்...



## மதுரையில் வருவாய் துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் உலக மகளிர் தின விழா!

மதுரை. மார்ச்.14–

மதுரை வருவாய் துறை அலுவலர்கள் சங்க கட்டிடத்தில் தமிழ்நாடு சமுக நலத் துறை ஒய்வூதியர் நல அமைப்பு சார்பாக உலக மகளிர் தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தநிகழ்ச்சி சின்னகாமாட்சி, தலைமையில் நடைபெற்றது. மண்டல தலைவர் நாகராஜன், மண்டல செயலாளர் பாலசரஸ்வதி, மற்றும் ஜெயலெட்சுமி, சந்திரவள்ளி, வசந்தி, பாலசுப்பிரமணியன், அழகுச்செல்வி, பத்மாசனி, ஆனந்தவள்ளி, உலகநாதன், பரமசிவன், ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். வாசன் கண் மருத்துவமனை மருத்துவ அலுவலர்களால் கண்சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. சுமார் 80 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. கலந்துகொண்ட அனைவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டு 65– 70 வயது நிறைவடைந்தவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவப் படுத்தப்பட்டனர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டு நாட்டுப்பண்ணுடன் கூட்டம் நிறைவடைந்தது.









இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


## வேலை வாய்ப்பு

## சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா (சிபிஐ) காலியிடங்கள்: 275

सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
1911 से आपके लिए ''केंद्रित'' "CENTRAL" TO YOU SINCE 1911

4500–க்கும் மேற்பட்ட கிளைகள், ரூ.7,74,000 கோடிக்கும் அதிகமான மொத்த வணிககள், 34000–க்கும் மேற்பட்ட திறமையான பணியாளர்களால் இயக்கப்படும் முன்னணி பொதுத்துறை வங்கியான சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில்(சிபிஐ) நிரப்பப்பட உள்ள 275 சிறப்பு அலுவலர் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் 23 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்கப்படுகின்றன.

மொத்த காலியிடங்கள்: 275

பணி: சிறப்பு அலுவலர்

பணி வாரியான காலியிடங்கள் விவரம்.

1. மென்பொருள் உருவாக்குநர் (டெவலப்பர் –ஜாவா) – 13
2. மொபைல் உருவாக்குநர்– ஆண்ட்ராய்டு/ஐஓஎஸ் – 3
3. மென்பொருள் உருவாக்குநர் (டெவலப்பர் டாட் நெட்)– 6
4. தரவுத்தள நிர்வாகம் – 11
5. டிஜிட்டல் சேனல் மேலாளர் / டிஜிட்டல் பயன்பாட்டு நிபுணர் – 23
6. லினக்ஸ்/சோலாரிஸ்/எஸ்ஏஎன்/சேமிப்பகம்/எஸ்ஆர்இ/திறந்த ஷிப்ட் – 14
7. விண்டோஸ் / ஏடி – 5
8. கிளவுட் மேலாளர் – 5
9. தகவல் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு மற்றும் ஐடி நிர்வாகம், ஆபத்து – 38
10. நெட்வொர்க் நிர்வாகி/நெட்வொர்க் பாதுகாப்பு – 5
11. உற்பத்தி ஆதரவு / ஆர்ஓசி/டிஜிட்டல் ஆதரவு – 26
12. எண்டர்பிரைஸ் / ஒருங்கிணைப்பு /பொது கிளவுட் கட்டிடக் கலைஞர் – 6
13. டெவ்செக்ஆப்ஸ் – 4
14. வலை சேவையகம்/ வலை தர்க்க நிர்வாகி –3
15. தரவு கட்டிடக் கலைஞர் – 2
16. தரவு பொறியாளர் / தரவு தரம்/ETL/PLSQL/BI – 15
17. தரவு விஞ்ஞானி – 6
18. ஜெனரல் AI – 2
19. ஐடி அதிகாரி – 82
20. இடர் மேலாளர் – 4
21. வரிவிதிப்பு/CA – 2தகுதி: பொறியியல் துறையில் பி.இ., பி.டெக்., எம்.சி.ஏ. முடித்திருப்பதுடன் 2 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விரிவான விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பை பார்த்து தெரிந்துகொள்ளவும்.

வயது வரம்பு: 31.1.2026 தேதியின்படி 30, 35, 45 வயதிற்குள் இருக்க வேண்டும். பதவியின் தன்மைக்கேற்ப வயதுவரம்பு மாறுபடுகிறது. அரசு விதிமுறைகளின்படி 3 முதல் 5 ஆண்டுகள் தளர்வு வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் தளர்வு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: ஆன்லைன் எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

தேர்வு மையம் (தமிழ்நாடு): சென்னை, மதுரை, திருச்சி, கோவை, வேலூர்.

விண்ணப்பிக்கும் முறை: https://www.centralbankofin–dia.co.in/en/recruitments என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 23.3.2026.

## ஆண்டிபட்டியில் நூதன ஆர்ப்பாட்டம்!



ஆண்டிபட்டி, மார்ச் . 15–

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியில் வணிக கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டிக்கும் வகையில், சமையல் கேஸ் சிலிண்டருக்கு தூக்கு கயிறு போட்டு, மரக்கட்டைகளால் தூக்கு மேடையிட்டு தூக்கிலிட்டு மாலை அணிவித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் நூதன முறையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். இஸ்ரேல் – ஈரான் போர் எதிரொலியால் தமிழகத்தில் வணிக கேஸ் சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, கேஸ் சிலிண்டர் விலை உயர்வு ஏற்பட்டிருப்பதாக குற்றம் சாட்டி தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி பழைய முருகன் தியேட்டர் பகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.வணிக கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் ஹோட்டல் டீக்கடை உள்ளிட்ட தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இதனை கண்டிக்கும் வகையில் இரண்டு மரக்கட்டைகளால் மேடை போல அமைத்து சமையல் கேஸ் சிலிண்டருக்கு தூக்கு கயிறு போட்டு தூக்கிலிட்டு தொங்கவிட்டு நூதன முறையில் கோஷம் எழுப்பி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த ஆர்ப்பாட்டத்தில் வணிக கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை போக்கி, கேஸ் சிலிண்டர் விலை உயர்வை கட்டுப்படுத்த கோரியும் , மத்திய அரசை கண்டித்தும், அமெரிக்காவை கண்டித்தும் கோஷம் எழுப்பப்பட்டது.தமிழகத்தில் ஹோட்டல் வணிக நிறுவனங்கள் இதன் காரணமாக பெரிதும் பாதிக்க பட்டிருப்பதாகவும் கோஷம் எழுப்பப்பட்டது.




